## 4.2 எம் இறைவனை ஆராதிப்போம்



. . . அலகை அவரை மிக உயர்ந்த ஒரு மலைக்குக் கூட்டிச் சென்று உலக அரசுகள் அனைத்தையும், அவற்றின் மேன்மையையும் அவருக்குக் காட்டி, அவரிடம், நீர் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து என்னை வணங்கினால் இவை அனைத்தையும் உமக்குத் தருவேன் என்றது.

அப்பொழுது இயேசு அதனைப் பார்த்து, அகன்று போ, சாத்தானே, உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணிசெய் என்றும் மறைநூலில் எழுதியுள்ளது என்றார்.

(மத் 4 : 8–10)

எம்மைப் படைத்து, பாதுகாக்கும் இறைவனை மட்டுமே நாம் ஆராதிக்க வேண்டும். அவரை நாம் விசுவசிக்க வேண்டும் அவரிடத்தில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவரை நாம் அன்பு செய்ய வேண்டும்.

**வினா :** இறை ஆராதனைக்கு எதிரான செயல்கள் எவை?

**விடை :** குருட்டுப் பக்தியில் ஈடுபடுதல், சிலைவழிபாடு

**வினா :** சிலை வழிபாடு என்றால் என்ன?

**விடை :** சிலையை அல்லது ஏதாவதொரு படைப்பை இறைவனாக நினைத்து படைத்தவரான ஒரே உண்மை இறைவனுக்குரிய ஆராதனையை அவற்றிற்குச் செலுத்துவதாகும்.

இறைவனுக்கு நாம் அளிக்கும் உன்னத வழிபாடு திருப்பலி ஆகும். அதைவிட தேவநற்கருணை வழிபாடு, திருமணித்தியாலம், நவநாள், செபம், பல்வேறு திருவிழாக்கள், திருப்பவனி போன்றவற்றின் மூலம் இறைவழிபாட்டில் பங்கு கொள்ள முடியும்.

மரியாவையும், ஏனைய புனிதர்களையும் நாம் ஆராதிப்பதில்லை.. இறைவனின் விசேட அழைப்பைப் பெற்ற அவர்களுக்கு நாம் எமது மரியாதையைச் செலுத்த வேண்டும்.

எமது ஆலயங்களில் சுரூபங்கள் வைத்திருப்பது நாம் அவற்றை ஆராதிப்பதற்காக அல்ல, சுரூபங்கள் அடையாளங்கள் மட்டுமே, அதிலிருந்து கிடைக்கும் செய்தியே எமக்கு முக்கியமாகும்.

இறந்துபோன எம் தாயின் அல்லது தந்தையின் படத்தை மிக அழகாக சட்டமிட்டு சுவரில் தொங்க விட்டிருப்போம். அந்த படத்தைக் காணும்போது அவர்களின் நற்குணங்கள் எமது நினைவில் எழுகின்றது. இதனால் அவர்கள் மட்டிலுள்ள எமது அன்பு மென்மேலும் வளர்ச்சி அடைகிறது. பெற்றோரின் வாழ்வில் நாம் கண்ட மிக உயர்ந்த குணங்களை எம்மிலும் உருவாக்க முயற்சிக்கின்றோம். அப்படமானது பெற்றோர்களைப்பற்றிய அடையாளம் மட்டுமே.

ஆலயங்களில் காணப்படும் பலவித சுரூபங்களும் அடையாளங்கள் மட்டுமே.

கலைஞன் ஒருவன் மரக்கட்டையொன்றை எடுத்து தனது திறமையைப் பயன்படுத்தி அதன்மூலம் சுரூபமொன்றைச் செய்தான். அதற்கு வர்ணம்தீட்டி. அலங்கரித்து தானே செய்த பீடமொன்றின்மேல் அச்சுரூபத்தை வைத்தான். அதன் பின் அதை இறைவனாக எண்ணி விழுந்து வணங்கினான். இது எவ்வளவு கீழ்த்தரமான செயலாகும்.

மனிதனால் உருவாக்கப்படும் கடவுளுக்கு கண் இருந்தும் பார்க்க முடியாது. காதிருந்தும் கேட்கமுடியாது. வாய் இருந்தும் பேசமுடியாது. கையிருந்தும் வேலை செய்ய முடியாது. கால்கள் இருந்தாலும் நடக்கமுடியாது. அவ்வாறான உயிரற்ற உருவாக்கங்களுக்கு இறைத்தன்மை இருப்பதாக எண்ணி வணக்கம் செலுத்துவது மிகவும் கீழ்த்தரமான செயல் என புனித பவுல் கூறுகிறார்.


எம்மைப் படைத்தவரும். படைப்பின் ஆண்டவரும் எம்மைப் பாதுகாப்பவரும் எமது மீட்பரும் எம்மை செயல்படுத்துபவருமான எல்லாம் வல்ல உயிருள்ள இறைவனை மட்டுமே நாம் வணங்கி ஆராதிக்க வேண்டும்.



பரிசுத்தர் பரிசுத்தர்.
மூவுலகின் தேவனாகிய
ஆண்டவர்.
வானமும் பூமியும் உமது
மகிமையால்
நிறைந்துள்ளன.
உன்னதங்களிலே
ஓசான்னா

அதேபோல் தூயவரான இறைவன் எழுந்தருளியுள்ள இடம் தூய்மையானதாகும். அதை நாம் மறக்கக் கூடாது.

இறைவன் மோசேயிடம்.
“இங்கே அணுகிவராதே. உன்
பாதங்களிலுருந்து
மிதியடிகளை அகற்றிவிடு.
நீ நின்று
கொண்டிருக்கின்ற
இந்த இடம் புனிதமான
நிலம்” என்றார்.



## நினைவிற் கொள்க.

இறைவனை ஆராதிக்க நாம் ஒன்றுகூடும் ஆலயம் புனிதமான இடமாகும். அதன் புனிதத்துவத்தைக் காப்பதற்காக நாம் ஒழுக்கமான, தகுந்த முறையில் அங்கு நடந்து கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல தூயவரான இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்தவர்களுக்கு நாம் மரியாதை செலுத்த வேண்டும். இறைவழிபாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கும், இடங்களுக்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும். அதன்படி

- ☆ மனிதர்
- ☆ இடம்
- ☆ பொருட்கள் மட்டில் மரியாதையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென சிந்தித்து தனித்தனியாக அட்டவணைப்படுத்துக.

இறைவழிபாட்டை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடுவதற்காக திருச்சபை திருவழிபாட்டு ஆண்டை முன்வைத்துள்ளது. அதன்படி

- ☆ திருவருகைக்காலம்
- ☆ கிறிஸ்து பிறப்புக்காலம்
- ☆ தவக்காலம்
- ☆ பாஸ்கா காலம்
- ☆ பொதுக்காலம் என

திருவழிபாட்டு ஆண்டு பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலத்திற்கும் எற்ப செபங்களும், நோக்கங்களும் வேறுபட்டவையாகும். இவைப்பற்றி நீர் மேல் வகுப்புக்களில் கூடுதலாக அறிந்து கொள்வீர்.

## உமது கவனத்திற்கு.

- ❖ ஆலயத்தில் தேவநற்கருணைப் பேழையில் கிறிஸ்து பிரசன்னமாக இருக்கிறார் என்பதை நீர் எவ்வாறு அறிவீர்?
- ❖ பாடசாலை நடைபெறும் நாளொன்றில் உமது வகுப்பிலுள்ள கத்தோலிக்க மாணவர்களுடன் ஆலயத்திற்குச் சென்று 15 நிமிடங்கள் தேவநற்கருணை வழிபாடு ஒன்றை நடத்தவும். பங்குபற்றும் அனைவரும் இறைவனுக்கு வணக்கம் செலுத்துமுகமாக சிறு செபமொன்றைச் சொல்லுவதற்கு ஆயத்தமாகச் செல்லவும்.

❖ பெரிய வியாழன் அல்லது நற்கருணைத்திருவிழா நாளில் ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டில் பங்கு கொள்ளவும்.

இறைவனை வழிபடுவது மனிதனின் கடமையாகும். உலக செல்வங்களுக்கு அடிமையாகியுள்ள பலர் அதற்குள்ளே வாழ்கின்றனரே தவிர இறைவழிபாட்டின் மூலம் ஆன்மீகத்தை நாடுவதில்லை.

உலக செல்வங்களுக்கு பணத்திற்கு அடிமையாகாமல் கிறிஸ்துவுக்காக அவற்றை மறுக்க இன்று மனிதனுக்கு ஆன்ம சக்தி தேவைப்படுகிறது. இதற்கு முன்மாதிரிகையாக எடுக்கக்கூடிய நிகழ்வொன்றை திருவிவிலியத்தில் மக்கபேயர் ஆகமத்தில் காண்கின்றோம்..

தாம் வழிபடும் விசுவாசத்திற்கும் தாம் கடைப்பிடிக்கும் கட்டளைகளுக்கும் எதிராக செயற்படும் அரச அதிகாரிகளின் ஆணைகளுக்கு கீழ்ப்படியாமல் அவர்களின் ஆணைகளை மறுத்து வீரர்களாக தமது உயிரைத் தியாகம் செய்த வீரத்தாயையும் அவரது ஏழு பிள்ளைகளையும் பற்றி **2மக்.7:1–42 பகுதியில்** குறிப்பிடப்பட்டுள்ளது.

## செயற்பாடு.

இறைவனிடத்தில் உண்மையான விசுவாசத்துடன் வாழ்ந்த ஒருவரைப்பற்றிய விபரங்களைத்தேடி அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தெளிவாக எழுதி சிறு நூல் ஒன்றைத் தயாரித்து உமது வகுப்பின் நூலகத்திற்கு அளிக்கவும்.

### இன்று உமது பொறுப்புப்பற்றி தூய பவுல் நினைவூட்கிறார்.

தூய பவுல் தமது தூதரைப் பயணத்தின் போது கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகருக்குச் சென்றார். கிரேக்கர் தேவையற்ற முறையில் பேசி நேரத்தை வீணாக்குவதில்லை. அறிவு சார்ந்த விடயங்களைப் பற்றியே அவர்கள் விவாதிப்பார்கள். அரயோப்பாகு எனும் மண்டபத்தில் கூடி இவ்விவாதங்களை அவர்கள் நடாத்துவார்கள். அங்கு அவர்கள் வழிபடும் தெய்வத்தின் சிலைகள் இருந்தன. அவற்றோடு அறியாத தெய்வத்திற்கு என்று ஒரு பலிபீடம் இருந்தது. இவற்றை அவதானித்த தூய பவுல் மண்டபத்தின் நடுவே எழுந்து நின்று அங்கிருந்த வர்களுக்கு போதித்தார். ஏதென்சு நகரமக்களே, நீங்கள் மிகுந்த சமயப்பற்றுள்ளவர்கள் என்பதை நான் காண்கிறேன். நான் உங்களுடைய தொழுகையிடங்களை உற்றுப் பார்த்துக் கொண்டு வந்தபோது அறியாத தெய்வத்துக்கு என்று எழுதப்பட்டிருந்த பலிபீடம் ஒன்றைக் கண்டேன். நீங்கள் அறியாமல் வழிபட்டுக் கொண்டிருக்கும் அந்த தெய்வத்தையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.

உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவர். மனிதர் கையால் கட்டிய திருக்கோவில்களில் அவர் குடியிருப்பதில்லை. அனைவருக்கும் உயிரையும் மூச்சையும் மற்றனைத்தையும் கொடுப்பவர் அவரே. கடவுள் தம்மை அவர்கள் தேடவேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தார்.

**நாம் அவருடைய பிள்ளைகள். நாம் கடவுளுடைய பிள்ளை களாய் இருப்பதால். மனித கற்பனையாலும் சிற்ப வேலைத்திறமை யரலும் உருவாக்கப்பட்ட பொன், வெள்ளி, கல் உருவங்களைப் போலக் கடவுள் இருப்பார் என நாம் எண்ணுவது முறையாகாது. ஏனெனில் மக்கள் அறியாமையில் வாழ்ந்த காலத்தில் கடவுள் இதனைப் பொருட்படுத்தவில்லை ஆனால் இப்போது எங்குமுள்ள மக்கள் யாவரும் மனம் மாற வேண்டும் என்று அவர் கட்டளையிடு கிறார்.**

**(தி. ப. 17: 29 – 30)**

இந்நிகழ்வு கத்தோலிக்கராகிய எமக்கு ஒரு பெரும் சவாலாக இருக்கிறது. மாயைகளுக்குள்ளாகி உண்மை இறைவனை அறியாதவர்கள் அவரைப்பற்றி அறிந்து கொள்வதற்கு, உண்மையான இறைவனுக்கு நாம் வழங்கும் ஆராதனை முன்மாதிரியாக அமையுமா?

- **இதைப்பற்றி சக மாணவருடன் கலந்துரையாடவும்.**